## தலைப்பு 293 – இறப்பர் அபிவிருத்தி திணைக்களம்

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

தலைப்பு 293 - இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2023 மே 19 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 யூன் 21 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சலை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் அதனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) முன்னைய ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் 03 மீண்டெழும் செலவின விடயங்களுக்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 110,285,000 கூட்டுமொத்த நிதியேற்பாடுகளில் மானியங்கள் மற்றும் பங்களிப்புகளுக்காக (1505) வழங்கப்பட்டிருந்த ரூபா 10,800,000 நிதியேற்பாடு முழுமையாகச் செலவிடப்பட்டிருக்காததுடன் செயற்பாட்டுக் குத்தகை மற்றும் ஏனைய படிகளிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாடுகளில் முறையே ரூபா 10,409,857 மற்றும் ரூபா 2,313,000 அதாவது தேறிய ஒதுக்கீட்டில் 12 சதவீதம் மற்றும் 24 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தன. | 2022.04.26 ஆம் திகதிய தேசிய பாதீட்டு சுற்றறிக்கை 03/2022 பொதுச் செலவினக் கட்டுப்பாட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் புதிய ஆட்சேர்ப்பு இடைநிறுத்தம் மற்றும் ஓய்வூதிய வயது உயர்த்தப்படுதல், செயற்பாட்டுக் குத்தகை மற்றும் வாடகை உடன்படிக்கைகள் புதுப்பிக்கப்படாதமை, டொலர்கள் தொடர்பான பிரச்சனையான சூழ்நிலை காரணமாக வங்கியில் இருந்து உறுப்பினர் கட்டணத்தை செலுத்தத் தவறியமை போன்ற காரணங்களால் நிதியேற்பாட்டில் சேமிப்பு ஏற்பட்டுள்ளது. | வருடாந்த மதிப்பீடுகளை இயன்றவரை சரியாகத் தயாரிப்பதற்கும், உரிய பணிகளில் நிதியேற்பாட்டைப் பயன்படுத்துவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | கட்டிடம் மற்றும் நிர்மாணம் (2001) மற்றும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செலவினங்கள் (2507) ஆகியவற்றிற்காக மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 10,000,000 தொகையான நிதியேற்பாட்டில் ரூபா 1,164,557 கூட்டுமொத்த நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | 2022.04.26 இல் வெளியிடப்பட்ட தேசிய பாதீட்டு சுற்றறிக்கை 03/2022 மற்றும் பொதுச் செலவினக் கட்டுப்பாட்டு சுற்றறிக்கை மற்றும் திறைசேரியில் இருந்து எதிர்பார்த்தவாறு நிதி கிடைக்காததால் சேமிப்பு ஏற்பட்டுள்ளது. | வருடாந்த மதிப்பீடுகளை இயன்றவரை சரியாகத் தயாரிப்பதற்கும், உரிய பணிகளில் ஒதுக்கப்பட்ட நிதிகளை செயற்திறனாக பயன்படுத்துவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

**2.2 கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களை ஏற்படுத்துதல்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஏற்பட்ட பொறுப்புக்கள் மற்றும் செலவினங்களின் தொகை நி.பி. 94 (1) இன் பிரகாரம் ஆண்டிற்கான நிதியேற்பாடுகளை விஞ்சக்கூடாத போதிலும் மீளாய்வாண்டின் போது 03 செலவின விடயங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட தேறிய நிதியேற்பாட்டை விஞ்சி ரூபா 634,867 தொகையான பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. | தற்போதுள்ள கடப்பாடுகள் நி.பி. 94(2) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் நோக்கெல்லைக்குள் உள்ளன என்பதை தயவுசெய்து குறிப்பிடுகிறோம். எனினும், கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் வரம்பிற்கு மேல் உருவாக்கப்படக் கூடாது என அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. | அங்கீகரிக்கப்பட்ட ஏற்பாட்டை விஞ்சி கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் ஏற்படாதவாறு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

**2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| அவதானிப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு** | **இணக்கமின்மை** | | |
| 2022 சனவரி 25 ஆம் திகதிய 04/2022 ஆம் இலக்க சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கையின் 02(ஆ) பந்தி | இயங்காத நிலையில் உள்ள வாகனங்களை திருத்தம்செய்து செயற்திறனாக பயன்படுத்துவதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் திணைக்களத்திற்கு சொந்தமான 03 பழுதடைந்த வாகனங்கள் 01 முதல் 05 வருடங்கள் வரை திருத்தப்படாமல் பயன்படுத்தப்படாமல் உள்ளன. | திருத்தங்களை மேற்கொள்வதற்கு போதிய நிதியேற்பாடு கிடைக்காததால் திருத்தம் செய்ய முடியவில்லை. | பழுதுபார்க்கப்பட்டு இயங்கும் நிலைக்குத் திரும்பக்கூடிய வாகனங்களின் திருத்தங்கள் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 நட்டங்களும் சேதங்களும்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நட்டம் ஏற்பட்டதில் இருந்து 03 மற்றும் 08 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலம் கடந்த 08 வழக்குகள் தொடர்பாக ரூபா 3,106,351 கூட்டுமொத்தமான நட்டங்கள் | இந்த சேதங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டதுடன், குறித்த குழுவானது பல வாகனங்களின் சேதங்கள் தொடர்பான விசாரணைகளை | நட்டங்கள் மற்றும் சேதங்களை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியதுடன் அறவிடமுடியாத |

| | | |
|---|---|---|
| மற்றும் சேதங்களை அறவிடுவதற்கோ அல்லது பதிவழிப்பதற்கோ திணைக்களம் நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை. | நிறைவுசெய்துள்ளதுடன், எஞ்சிய வாகனங்கள் தொடர்பான பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | நட்டங்கள் மற்றும் சேதங்களை பதிவழிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

**3.2 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தின் நிர்வாக கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு சொந்தமான ரூபா 66,700,000 பெறுமதியான 75 பேர்ச்கள் காணியை 2009 ஆம் ஆண்டில் ரூபா 59,304,347 தொகையை செலுத்தி திணைக்களம் கொள்வனவு செய்திருந்த போதிலும் இந்த காணி இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தினால் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் கையேற்கப்பட்டிருக்காததுடன் 13 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் இந்த காணியில் எந்தவொரு நிர்மாணமும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நகர அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட காணியை திணைக்களத்திற்கு முறைப்படி மாற்றுவதற்காக காணியை பரீட்சித்து அளவீடு செய்வதற்காக பிரதேச செயலாளர் நில அளவை திணைக்களத்திற்கு அனுப்பியிருந்தார். இந்த காணியில் கட்டிடம் அமைப்பதற்கு திறைசேரியில் இருந்து ஒதுக்கீடுகள் கோரப்பட்டுள்ள போதிலும் புதிய கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கான ஒதுக்கீடுகளை தற்போது வழங்க முடியாது என திறைசேரி தெரிவித்துள்ளது. | காலதாமதமின்றி காணியை சுவீகரித்து தேவையான நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

**3.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 15 மாவட்டங்களில் உள்ள 32720 விவசாயிகளுக்கு இறப்பர் மீள்நடவு மற்றும் புதிய நடவுக்காக வழங்கப்பட்ட பயிர்ச்செய்கை மானியத் தொகையில், பயிர்ச்செய்கை கைவிடப்பட்டதால் மீளாய்வாண்டின் இறுதியில் 3,327 விவசாயிகளிடமிருந்து ரூபா 113,368,340 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. | நட்டமடைந்த விவசாயிகளுக்கு செலுத்தப்படும் மானியத் தொகையை சேகரிப்பதற்கு கடிதம் அனுப்புதல், கூட்டங்கள் நடாத்துதல், கள உத்தியோகத்தர்கள் மூலம் பணத்தைத் திருப்பிச் செலுத்துமாறு விவசாயிகளுக்குத் தெரியப்படுத்துதல் போன்ற பல நடவடிக்கைகள் பிராந்திய அலுவலகங்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டன. | மானியம் பெற்று இறப்பர் விவசாயம் கைவிடப்படுவதற்கு காரணமான விடயங்களை ஆராய்ந்து பெறப்பட வேண்டிய பணத்தை உடனடியாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழ் கட்டுப்பாட்டில் உள்ள 69 விடுதிகளின் சட்டரீதியான | காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு, பிரதேச செயலாளர்கள் மற்றும் இறப்பர் ஆராய்ச்சி நிறுவனம் | விடுதிகளின் சட்டரீதியான உரிமைத்துவத்தை பெற்றுக் |

| | | | |
|---|---|---|---|
| | உரிமைத்துவமானது ஏனைய அரசாங்க நிறுவனங்களிடமே உள்ளதுடன் அவற்றின் உரிமைத்துவத்தை முறையாகக் கையகப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் நாளதுவரை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ஆகியவற்றிலிருந்து உரிய காணி சுவீகரிப்பு நடவடிக்கைகள் அந்த நிறுவனங்களின் ஒருங்கிணைப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றதுடன் முன்னைய ஆண்டில் 04 காணிகளை சுவீகரிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | கொள்வதற்கான நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட வேண்டும். |
| (இ) | திணைக்களத்திற்குச் சொந்தமான 03 பிராந்திய அலுவலகங்களின் கீழ் உள்ள பன்னிரண்டு விடுதிகள் 03 முதல் 10 வருடங்கள் வரையான காலமாக பயன்படுத்தப்படாமல் இருந்ததால் அந்த வீடுகள் பாழடைந்து காணப்பட்டதால் திணைக்களம் அதனது வருமான மூலங்களையும் இழந்துள்ளது. | தேவைப்பட்டவாறு விடுதிகளை பராமரிப்பதற்கு ஆண்டொன்றிற்கு ஏறத்தாழ செலவினங்களாக ரூபா 100 இலட்சங்களுக்கு மேல் தேவைப்படுகின்ற போதிலும் வருடாந்த மதிப்பீட்டில் ஏறத்தாழ ரூபா 50 இலட்சம் தொகை ஒதுக்கப்பட்டுள்ளதால் ஓராண்டில் தேவையான அனைத்து திருத்தங்களையும் மேற்கொள்ள முடியாததால் சில விடுதிகளில் இறப்பர் அபிவிருத்திப் பிரதேச அலுவலகங்கள் இயங்குவதற்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றன. | முறையான அங்கீகாரங்களின் அடிப்படையில் இந்த விடுதிகள் உரிய நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட வேண்டியதுடன், தேவையான திருத்தங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 01 முதல் 11 ஆண்டுகள் வரை இந்தத் திணைக்களத்தினால் ஏனைய திணைக்களங்கள் மற்றும் அமைச்சுக்களிடமிருந்து பெறப்பட்ட 04 மோட்டார் வாகனங்கள் மற்றும் 16 மோட்டார் சைக்கிள்கள் திணைக்களத்தின் பெயரில் பதிவு செய்து பெற்றுக்கொள்வதற்கு மீளாய்வண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஐயவினாவில் குறிப்பிடப்பட்டுள்ள 04 மோட்டார் வாகனங்கள் மற்றும் 16 மோட்டார் சைக்கிள்களை திணைக்களத்தின் பெயரில் பதிவு செய்யுமாறு பெருந்தோட்ட அமைச்சிடம் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. | திணைக்களத்திற்கு கிடைத்த வாகனங்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்களை கையகப்படுத்தும் நடவடிக்கைகள் விரைவில் பூர்த்தி செய்யப்பட வேண்டும். |

## 4. மனித வளங்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியில் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 481 ஆக இருந்த போதிலும் உள்ளபடியான பதவியணியினர் 422 ஆக இருந்ததால், கணக்காய்வின் போது 59 | திணைக்கள இறப்பர் அபிவிருத்தி உத்தியோகத்தரின் இந்த 59 வெற்றிடங்களில் 47 வெற்றிடங்களை நிரப்புவதற்கான ஆட்சேர்ப்புப் பரீட்சை நடாத்தப்பட்டு அந்த ஆட்சேர்ப்பிற்கான அங்கீகாரம் கோரப்பட்டுள்ளது. அரசாங்க | பதவியணியினர் வெற்றிடங்களிற்கான அவசியத்தை சரியாக இனங்கண்டு ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பதவியணியினர் வெற்றிடங்கள் காணப்பட்டன. அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை கருத்தில் கொண்டு உள்ளபடியான பதவியணியினரை திருத்துவதற்கு அல்லது புதிய பதவியணியினரை ஆட்சேர்ப்பு செய்வதற்கு திணைக்களம் நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை. | கொள்கையின் பிரகாரம் ஆட்சேர்ப்புக்கான அங்கீகாரத்தை வழங்குதல் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதால் தற்போது வரை அந்த ஆட்சேர்ப்புக்கான அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்கவில்லை. | |
| (ஆ) | 13 சிரேஷ்ட நிலை வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் இலங்கை நிர்வாக சேவையில் 02 பணிப்பாளர் பதவிகளும் 04 உதவிப் பணிப்பாளர் பதவிகளும் கணக்காளர் சேவையில் 03 பதவிகளும் இருந்த போதிலும் 2020 ஆம் ஆண்டிலிருந்து ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | திணைக்களத்தில் உள்ள உயர் மட்ட பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு மற்றும் வெற்றிடங்களை நிரப்புதல் பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரால் செய்யப்படுவதால் இந்த வெற்றிடங்கள் குறித்து உரிய அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | பதவியணியினர் வெற்றிடங்களிற்கான அவசியத்தை சரியாக இனங்கண்டு ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |